3. உரிமை பிரச்சினைகள்

அ. பேரவை நடைபெறும்போது அரசின் கொள்கைப் பற்றிய அறிவிப்பு களை அவையில் வெளியிடுவதற்கு முன் துறை அதிகாரி நாளேடுகளுக்குத் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 246-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. ப தீர்த்தராமன், திரு. எஸ். என். இராமசாமி, திரு. இ. முத்துராமலிங்கம் ஆகியோர், அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு முன்னறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள்.

காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் 5-5-1981 அன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கையில் 3-5-1981 நாளிட்ட "தினமணி" நாளேட்டில் அத் துறையில் எடுக்கப்பட இருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி உள் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்றும் இது அவை உரிமை மீறிய செயலாகும், என்றும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அரசின் கொள்கைப் பற்றிய அறிவிப்புகள், பேரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பேரவையில்தான் செய்யவேண்டும் என்பது மரபுதானேயொழிய, அப்படிச் செய்யாதது உரிமை மீறல் ஆகாது என்று பல தீர்ப்புகள் உள்ளன. இதே போன்று இதில் அவை உரிமை மீறல் இல்லை என்று தான் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

எனவே இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினையிலும் அவை உரிமை மீறல் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன். ஆயினும் இப்படி நிகழ்வது இது முதல் முறை இல்லை என்பதாலும் துறைகளுக்கு அறிவுறுத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்று நான் கருதுவதாலும் இப்பிரச்சினையை பேரவையில் எடுத்து எனது தீர்ப்பினை அளிக்கிறேன். கொள்கை பற்றிய ஒரு பிரச்சினையை, அதுவும் மானியக் கோரிக்கை பேரவையில் எடுத்துக் கொள்ளப் பட இருக்கையில், பத்திரிகையில் வெளியிடுவது சரியான மரபாகாது. எதிர்காலத்தில் இப்படி வெளியிடுவது தவிர்க்கப்பட வேண்டும். துறைகள் எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்பு கிறேன்.

ஆ. சட்டமன்றக் குழுக்களுடன் அரசுத் துறைகள் ஒத்துழைப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. பேரவையின் 246-விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்ப என் இசைவைக்கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் ஓர் முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். என் இசைவை ஏன் அளிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுருக்க மாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.